# நிகழ்நிலைக் கல்வி மலையக பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களில் ஏற்படுத்தியுள்ள ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்கள்: கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்டப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ராஜா பிரியதர்ஷனி, முனியாண்டி ரவி**
தத்துவவியல் மற்றும் விழுமிய கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
priyadarsani432@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இன்றைய நவீன யுகத்தில் ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு உலகில் ஏற்பட்ட தொழிநுட்பப் புரட்சியும் மிக முக்கிய காரணமாகவுள்ளது. இன்று எம்மால் மேற்கொள்ளப்படுகின்ற அனேகமான செயற்பாடுகளில் தொழிநுட்ப சாதனங்களின் பங்களிப்பு இன்றியமையாததாக காணப்படுகின்றது. இதனடிப்படையில் சமீபகாலங்களில் உலகையே ஆட்டிப்படைத்த covid-19 பெருந்தொற்றினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக் கல்வியின் மாணவர்கள் தங்களது கற்றல் செயற்பாடுகளை தொலைத்தொடர்பு சாதனங்களின் வாயிலாக முன்னெடுத்துச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் விளைவினால் மாணவர்கள் நாகரிகம் எனும் அநாகரிக மாயைக்குள் தெரிந்தும் தெரியாமலும் விழுந்து, ஒழுக்க விழுமியங்களை புறந்தள்ளிவிடுவதனால் பல்வேறு வகையிலும் ஒழுக்க ரீதியான சவால்களை எதிர்நோக்கியுள்ளனர். அந்தவகையில் நிகழ்நிலைக் கல்வியினூடாக மாணவர்களிடத்தில் அதிகரித்த சமூக வலைத்தளப் பாவனை அவர்களை எவ்வாறான ஒழுக்க மீறுகைகளுக்கு ஆளாக்கியுள்ளது என்பதை கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது ஆய்வு பிரதேசமாக கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட கல்வி வலயத்திற்குட்பட்ட தெஹியோவிட்ட கோட்டத்திலுள்ள 9 தமிழ் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. நோக்க மாதிரியைக் கொண்டு சிரேஷ்ட இடைநிலை பிரிவு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாய்விற்காக கவனக் குழு நேர்காணல், வினாக்கொத்து மற்றம் அவதானம் ஆகிய ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டன. அந்தவகையில் ஆய்வு முடிவுகளிலிருந்து, அதிகமான மாணவர்கள் நிகழ்நிலைக் கல்வியினூடாக அதிகரித்த சமூக வலைத்தளங்களின் பாவனையால் பல்வேறு ஒழுக்க மீறுகைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். இதனால் பாதிப்படையும் கற்றலையும் எதிர்காலத்தையும் வளப்படுத்த சமூக வலைத்தளங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் பிள்ளை மீது கொண்டிருக்க வேண்டிய இடைத்தொடர்புகள் போன்றவற்றுக்கான சிபார்சுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *நிகழ்நிலைக் கல்வி, சமூக வலைத்தளங்கள், ஒழுக்க மீறுகை, கொவிட்-19*

## ஆய்வு அறிமுகம்

நிகழ்நிலைக் கல்வி மலையக பாடசாலை மாணவர்களில் ஏற்படுத்தியுள்ள ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்கள் எனும் தலைப்பினை அடிப்படையாகக் கொண்டதாக இவ்வாய்வு அமைகின்றது. அந்த வகையில் மெய்யியலின் ஒரு விரிவான ஒழுக்கவியலானது மனிதனின் ஒழுக்கம் தொடர்பான விடயங்களை ஏனைய துறைகளுடன் ஒன்றித்து நோக்கத்தக்கதாக காணப்படுகின்றது. அதாவது மனிதன் எவ்வாறு வாழ வேண்டும்? எத்தகைய செயற்பாடுகளை செய்ய வேண்டும்? எத்தகைய செயற்பாடுகளை செய்யக்கூடாது? போன்ற மனித நடத்தை தொடர்பான தீர்ப்புக்களை முன்வைக்கும் துறையாக இருப்பதுடன் அவற்றுக்கான அடிப்படைகளையும் வழங்கி வருகின்றது (பிரேம்குமார், 2020).

இத்தகைய ஒழுக்கவியலானது “நான் என்ன செய்ய வேண்டும்” என்ற வினாவுக்கு விடை தருகின்ற ஒன்றாக காணப்படுகின்றது. குறிப்பாக மனித முயற்சிகளில் சரியான, தவறான செயல்கள் மற்றும் அவை ஏன் என்ற ஒழுக்கக் கண்ணோட்டத்தில் ஆராய்கின்றது. அந்தவகையில் ஒழுக்கவியலானது ஆங்கிலத்தில் “Ethics” என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. “Ethics” என்ற இவ் ஆங்கிலச் சொல் ‘Ethos’ என்ற கிரேக்க சொல்லில் இருந்து தோன்றியதாகும். இச்சொல்லின் நேரடி அர்த்தம் வழக்கம், மரபு, பழகிப்போன நடத்தை எனக் குறிக்கப்படுகிறது. பின்னர் இது சீலம் என்பதாக அர்த்தம் கொண்டது. இது போன்று ஒழுக்கவியலுடன் மிகவும் தொடர்புடைய இன்னுமொரு சொல்லாகிய ‘Moral’ என்ற ஆங்கிலச் சொல் இலத்தீன் மொழியில் உள்ள ‘Mores’ என்ற சொல்லில் இருந்து தோன்றியதாகும் (ஜமாஹீர், 2012:02-03).

இதன் அடிப்படையில் கல்வி என்பது மனிதனுக்கு விலை மதிப்பிட்டுக் கூற முடியாத சொத்தாக காணப்படுகின்றது. ஒரு மனிதன் ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடிப்பதற்கு கல்வி இன்றி அமையாததொன்றாகவும் காணப்படுகின்றது. எனினும் சமீப காலங்களில் நாம் எதிர் நோக்கிய பாரிய சவாலாக உலகையே ஆட்டிப்படைத்த கொரோனா வைரஸ் உலக அளவில் பல விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையை பொருத்தவரையில் கற்றல், கற்பித்தல் என்பது ஒரு பெரிய சவாலான விடயமாகவே இருந்தது. அதாவது கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் முகமாக அமுல்படுத்தப்பட்ட பொதுமுடக்கங்களின் விளைவாக பாடசாலைகளில் வகுப்பறையில் நடைபெறும் நேரடி கற்றல், கற்பித்தல் முறைக்கு மாற்றீடாக நிகழ்நிலை கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

நிகழ்நிலைக் கற்றல் என்பது நாம் கற்பிக்கும் முறையிலும் கற்றுக் கொள்ளும் முறையிலும் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியதொன்றாக கருதப்படுகின்றது. இத்தகைய நிகழ்நிலை கல்வி முறையினூடாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் கொவிட்-19 பெரும்தொற்று காலப்பகுதியில் ஏற்புடையதாக காணப்பட்டாலும் கூட மலையக பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் அது பாரிய சவாலாகவே காணப்பட்டது (இராஜேஸ்கண்ணன், 2021). மலையகத்தை பொறுத்தவரையில் இங்கு பெரும்பாலும் கல்வி, பொருளாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் குறைவானதான வாழ்க்கை முறையை வாழும் மக்கள் சமூகத்தினரே காணப்படுகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் நிகழ்நிலைக் கல்வியானது சாதாரண கற்றல் முறையில் இருந்து வேறுபட்ட வழியிலோ அல்லது வகையிலோ கற்கும் திறனை வரையறுத்து நோக்கக் கூடியதாக காணப்பட்டது. அதாவது இக்கற்றல் செயற்பாட்டிற்காக மாணவர்கள் பெரும்பாலும் கையடக்கத்தொலைபேசிகளையே பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கவிடயமாகும். இத்தகைய கையடக்கத் தொலைபேசிகளானது தற்காலத்தில் உலகையே உள்ளங்கைக்குள் அடக்ககூடிய ஆற்றல் கொண்டதாக காணப்படுகின்றது (முனீஸ்மூர்த்தி, 2000). எனவே இத்தகைய கல்வி மாற்றம் மலையக பாடசாலை மாணவர்களை சவால்களுக்கு முகங்கொடுக்கச் செய்துள்ளது. குறிப்பாக ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்களுக்கும் ஆளாக கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கா.பொ.த சாதாரண பரீட்சை என்பது மாணவர்கள் உயர்கல்வியை நோக்கி செல்லும் பாதையில் முதல் படிக்கல்லாகும். எனவே மாணவர்கள் அதிக முக்கியத்துவம் செலுத்தக்கூடிய காலப்பகுதியாக தரம் 10 மற்றும் 11 வகுப்புகள் காணப்படுகின்றன. தரம் 10 மற்றும் 11 வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்கள் இத்தகைய நிகழ்நிலைக் கல்வியினால் அதிகரித்த சமூகவலைத்தள பாவனையால் எவ்வாறான ஒழுக்க ரீதியான தாக்கங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதனை இனங்காண்பதை அடிப்படையாகக் கொண்டதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதற்கு அமைவாக மலையகத்தை மையப்படுத்தும் வகையில் கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட என்ற பிரதேசத்தில் உள்ள ஒன்பது பாடசாலைகளை அடிப்படையாக கொண்டதாக இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

***பிரதான நோக்கம்***

இடர் காலங்களில் கற்றல் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக் கல்வி முறையினால் அதிகரித்த சமூகவலைத்தள பாவனை மலையக பாடசாலை சிரேஷ்ட இடைநிலை மாணவர்களில் எவ்வாறான ஒழுக்க ரீதியான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளது என்பதை இனங்கண்டு அதற்கான சிபார்சினை முன்வைத்தல்.

**ஆய்வுப் பிரச்சினை**

சமீப காலங்களில் உலகளாவிய அளவில் ஏற்பட்ட கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் விளைவாக அறிமுகப்படுத்தப்பட்ட பெரும் முடக்கத்தினால் பாடசாலைகளில் நடைபெறும் நேரடி கற்பித்தல் செயல்பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலையில் அதற்கு மாற்றீடாக முன்னெடுக்கப்பட்ட நிகழ்நிலைக் கல்வி முறையின் வாயிலாக மலையகப் பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களில் ஏற்பட்டுள்ள ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்கள் என்ற இவ்வாய்வின் ஆய்வுப் பிரச்சினைகளாக நிகழ்நிலைக் கல்விக்காக பயன்படுத்திக் கொள்கின்ற தொலைத் தொடர்புச் சாதனங்களை முறையாக கையாளத் தெரியாமை, கல்வி நடவடிக்கைகளை விட பொழுதுப் போக்கு விடயங்களுக்காக சமூக வலைத்தளங்களை பயன்படுத்துதல், சமூக வலைத்தளப் பாவனை மாணவர்களிடத்தில் எத்தகையான ஒழுக்கவியல் ரீதியான நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துகின்றது போன்ற விடயங்களை ஆய்வு பிரச்சினைகளாக குறிப்பிடலாம்.

**ஆய்வு கருதுகோள்**

நிகழ்நிலைக் கல்வி முறையினால் அதிகரித்த சமூகவலைத்தள பாவனை மலையக பாடசாலை மாணவர்களுக்கு பல்வேறு வகையான ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்கள் ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைந்துள்து என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

ஒழுக்கவியல் எனும் போது அதன் இறுதி நோக்கமாக அமைவது நன்மையாகும். பொதுவாக மனிதன் எவ்வாறான வாழ்க்கையை வாழ வேண்டும்? எத்தகைய செயல்பாடுகளை செய்ய வேண்டும் மற்றும் செய்யக்கூடாது? எது சரியானது? எது பிழையானது? நன்மை - தீமை போன்ற பல்வேறு விடயங்களை ஆராயும் ஓர் துறையாக இது காணப்படுகின்றது. எனினும் இத்தகைய ஒழுக்க விழுமியங்களை நாம் கடைபிடிக்கின்றோமா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது (பிரேம்குமார், 2020). இதற்குப் பிரதான காரணமாக அமைவது தற்காலத்தில் உள்ள தொலைத்தொடர்பு சாதனங்கள் எனக் குறிப்பிடலாம்.

இதற்கமைவாக கொவிட்-19 பெருந்தொற்றின் விளைவாக மாணவர்களின் கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட ஒரு கல்விச் செயல்பாடாக நிகழ்நிலை கல்விமுறை அமைகின்றது. எனினும் இக்கல்விச் செயல்முறை தொலைத்தொடர்பு சாதங்களை அடிப்படையாக கொண்டமைந்துள்ளமையினால் மாணவர்கள் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவதற்கு அதிக வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. இது பல்வேறு வகையான ஒழுக்க ரீதியான தாக்கங்களுக்கு ஏதுவாக காணப்பட்டுள்ளது. அதாவது கல்வி என்பது ஒரு மனிதனை சீர்படுத்துவதாக இருக்கும் சந்தர்ப்பத்தில் இத்தகைய கல்வி செயற்பாடுகளினால் மாணவர்களின் ஒழுக்க ரீதியான தாக்கங்களுக்கும் காரணாக அமைகின்றது என்பதை இவ்வாய்வு எடுத்துரைக்கின்றது. இவற்றையே ஆய்வின் முக்கியத்துவமாகவும் கொண்டு செயற்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

ஓர் ஆய்வில் சரியான முடிவினைப் பெற வேண்டும் எனின் முறையான முறையியலை பின்பற்றுவது என்பது இன்றியமையாததாகும். அதாவது முறையியல் என்பது ஒரு ஆய்வினை வழிநடத்தி செல்லுகின்ற ஒரு வழிகாட்டியாகவும், நுட்பமாகவும் உள்ளது. இதனடிப்படையில், இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கான தகவல் சேகரிப்பு, மாதிரித்தெரிவு, தரவு சேகரிக்க எவ்வாறான கருவிகள் பயன்படுத்தப்பட்டன, ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள், தரவுப் பகுப்பாய்வு முறைமைகள் என்பன தொடர்பான விடயங்கள் இவ்வாய்வு முறைமையில் உள்வாங்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் இவ்வாய்வுக்கான தரவுகள் நூல்கள், பத்திகைகள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைககள், அறிக்கைகள், இணையம் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகள் மூலமும் மேலும் மாணவர்கள், ஆசிரியர்கள், பொற்றோர்களிடம் வினாக்கொத்து, கவனக் குழு நேர்காணல் (focus group) மற்றும் அவதானம் மூலமாகவும் தரவுகளை சேகரிக்கப்பட்டது.

**ஆய்வு வரையறை**

இவ்வாய்வின் வரையறையானது நிகழ்நிலைக் கல்வி செயல்முறைகளின் பின்னர் பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டன. எனினும் இவ்வாய்வானது கேகாலை மாவட்டத்தில் உள்ள தெஹியோவிட்ட பிரதேசத்தினை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. ஆய்வின் பொருட்டு இப்பிரதேசத்திற்கு உட்பட்ட ஒன்பது பாடசாலைகளை தெரிவு செய்துள்ளேன்.

**இலக்கிய மீளாய்வு**

இலக்கிய மீளாய்வு என்பது ஒரு ஆய்வுப்பிரச்சினையை செயல்முறையில் முன்வைப்பதற்கு துணைப் புரிகின்றது. அதாவது ஏனைய ஆய்வுகளில் இருந்து குறித்த ஆய்வு எவ்வகையில் வேறுப்பட்டு தனித்துவமாக அமைந்துள்ளது என்பதை எடுத்துரைக்கின்றது. இதனடிப்படையில் இவ்வாய்வு தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், அறிக்கைகள் என்பவற்றினை வாசித்து அவற்றினை ஆய்வு செய்வது மிக முக்கியமாகும். எனவே ''நிகழ்நிலைக் கல்வி மலையக பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களில் ஏற்படுத்தி உள்ள ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்கள்.'' எனும் தலைப்பிலான இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் சில இங்கு நோக்கப்படுகின்றது.

முனீஸ் மூர்த்தி. மு, (2000) ''ஊடகவியல்'' எனும் நூலினூடாக மரபுவழி ஊடகங்கள், அச்சு ஊடகங்கள், என்பன தொடர்பான விடயங்களையும் வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம், முகநூல் என்பவற்றின் ஒழுக்க மீறுகைகள் தொடர்பான கருத்துக்கள் விபரிக்கப்பட்டுள்ளது.

குரு அரவிந்தன். (2018) ''தாய்வீடு'' எனும் சஞ்சிகையில் ''செல்பி எடுக்க போகிறீர்களா?'' எனும் கட்டுரையில் இருந்து கையடக்கத்தொலைபேசினால் ஏற்படும் ஒழுக்கப்பிரச்சினைகள் மற்றும் சமகால இளைஞர் சமூகம் கையடக்கத்தொலைப்பேசிக்கு வழங்குகின்ற முக்கியத்துவம் தொடர்பாக விபரிக்கப்பட்டுள்ளது.

நுஸ்கியா,ஏ.எல்.எப். (2020) ''covid-19 தொற்றும், நிகழ்நிலை கல்வியினால் மாணவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளும் அவற்றை எதிர்கொள்வதற்கான வழிமுறைகளும்'' எனும் தலைப்பில் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரையில் இருந்து கொவிட்-19 தொற்று காலங்களில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக் கல்வி தொடர்பாககவும், அதன் சாதக, பாதகங்ளையும் விபரிப்பதோடு, கொவிட்-19 தொற்று தொடர்பான தகவல்களும் காணப்படுகின்றது.

ஸ்மட்,எம்.எம்.ஏ. (2015) ''இணையத்தளம் மற்றும் கையடக்கத் தொலைபேசி பாவனைப் பிரச்சினைகளும் ஒழுக்கம் பேணப்படுமா?'' எனும் தலைப்பில் வெளியிட்ட ஆய்வுக்கட்டுரையிலிருந்து கையடக்கத் தொலைபேசியின் பாவனையினால் ஏற்படும் ஒழுக்க பிரச்சினைகள் தொடர்பான விடயங்கள் விபரிக்கப்பட்டுள்ளது.

Divajini, (2015) புதிய தொழிநுட்பங்கள் இன்று பாடசாலை மாணவர்களின் மையப் புள்ளியாக விளங்குகின்றது. அவர்களின் அன்றாட வாழ்வியல் அம்சங்களில் பண்பாடு, விழுமியம், நெறிமுறைகள், காலாச்சார அம்சங்கள், உணவுப் பழக்கவழக்கங்கள், உறவுமுறைகள் என அனைத்து அம்சங்களிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

Flannery,J. "Social Media and its effects on youth" எனும் தலைப்பில் சமூக ஊடகங்கள் என்றால் என்ன? அவை எவ்வாறு இளைஞர்களில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது என்பது தொடர்பாகவும், அது எவ்வாறு அவர்களின் நடத்தையில் உளவியலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பது தொடர்பாகவும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**பெறுபேறும் கலந்துரையாடலும்**


இவ்வாய்வினை மேற்கொள்வதற்குத் தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளாக வினாக்கொத்து, நேர்முகங்காணல், அவதானம் என்பன அமைந்தன. இவ்வாய்வில் அளவு மற்றும் பண்பு ரீதியில் அமைந்த கலப்பு முறையியல் (Mixed Method) பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அடிப்படையில் ஆசிரியர்களிடமிருந்து வினாக்கொத்தினூடாகவும், எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் கவனக் குழு நேர்காணல் மூலமும் தரவுகள் பெற்றுக்கொள்ளபபட்டது.

இதனடிப்படையில் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட தெஹியோவிட்ட பிரதேசத்தை அடிப்படையாக கொண்டு தெஹியோவிட்ட கோட்டத்திலுள்ள தமிழ் பாடசாலைகள் (1AB-1,1C-4,TYPE-II-4) ஒன்பதினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. நோக்க மாதிரியைக் கொண்டு சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மொத்த மாணவ மாதிரிகளில் 1.10 என்ற விகிதத்தில் 90 மாணவர்களும் (எழுமாற்று மாதிரியின் அடிப்படையில்) ஒரு பாடசாலையிலிருந்து 4 ஆசிரியர்கள் வீதம் 1:4 என்ற விகிதத்தில் 36 ஆசிரியர்களும் ஒரு பாடசாலைக்கு 2 பெற்றோர்கள் வீதம் 1:2 என்ற விகிதத்தில் 18 பெற்றோர்களும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் வினாக்களின் வாக்கிய அமைப்பு, வினாவின் நீளம் என்பவற்றிலும் மற்றும் விடையளிப்பவரின் உடல், உள நிலைப்பாடுகளிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எனது ஆய்வின் அடிப்படையில் கொவிட்-19 தொற்றின் போது ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் விளைவால் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக்கல்வியினால் மாணவர்களிடத்தில் அதிகரித்த சமூக வலைத்தளங்கள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களின் பாவனையும் அவர்களை ஒழுக்க மீறுகைகளுக்கு உட்படுத்தியுள்ளமையை விபரிப்பதாகவே காணப்படுகின்றது. இதனை வரைபடம் 01 விபரிக்கின்றது.

**வரைபடம்: 01**

***நிகழ்நிலைக் கல்வியின் பின்னர் மாணவர்களில் சமூக வலைத்தளங்களின் செல்வாக்கு***




**மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.**


நிகழ்நிலை கல்வி பெரும்பாலான மாணவர்களுக்கு தொலைதொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்தது. அந்த வகையில் மாணவர்களின் அதிக அளவில் பயன்படுத்துகின்ற சமூக வலைத்தளங்கள் எவை என நீர் கருதுகின்றீர்? என ஆசிரியர்களிடம் கேட்கப்பட்ட போது 36 ஆசிரியர்களில் WhatsApp யினை 36 ஆசிரியர்களும் Facebook யினை 30 ஆசிரியர்களும் Imo யினை 15 ஆசிரியர்களும் Tik Tok யினை 31 ஆசிரியர்களும் Snapchat யினை 27 ஆசிரியர்களும் Instragram யினை 13 ஆசிரியர்களும் Twitter யினை 06 ஆசிரியர்களும் Viber யினை 02 ஆசிரியர்களும் தெரிவு செய்திருந்தனர்.

***நிகழ்நிலை கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர்களின் திருப்தி நிலை மட்டம்***

இதன் அடிப்படையில் அறியுமிடத்து 89% ஆசிரியர்கள் "இல்லை" என்றும் 11% ஆசிரியர்கள் "ஆம்" என்றும் குறிப்பிட்டுள்ளனர். தொடர்ந்து ஆம் மற்றும் இல்லை என்பதற்கான காரணங்களை தொடர்பாக கேட்கப்பட்ட போது ஆம் என்பதற்கான காரணங்களாக நேரடியாக கற்பித்தல் செயல்பாடுகளில் செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் நிகழ்நிலைக் கல்வி பயனுடையதாக அமைகின்றது. வேண்டிய நேரத்தில் கற்பிக்க முறைமை கவர்ச்சிகரமாக இருத்தல், அதிக நேரம் கற்பிக்கக் கூடியதாக இருத்தல் முதலான காரணங்களை முன்வைத்திருந்தனர். அதேபோன்று இல்லை என்று கூறும் ஆசிரியர்கள் அதற்கான காரணங்களாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான இடைத்தொடர்பை பேண முடியாமை, இணையச்சாதனங்களை கற்றல் தவிர்ந்து தவறான விடயங்களுக்கு உபயோகிக்கக்கூடிய வாய்ப்பு அதிகம், சமூக வலைத்தளங்களின் பாவனையினால் மாணவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்றார்கள். கற்றலில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு பொருத்தமற்ற ஒன்றாக காணப்படுகின்றது, ஆசிரியர்களால் மாணவர்கள் கற்றலில் ஈடுபடுகின்றார்களா என்பதை அவதானிக்க முடியாமை முதலான காரணங்கள் முன்வைக்கப்பட்டிருந்தது. இதனை வரைபடம் 02 தெளிவுபடுத்துகின்றது.

**வரைபடம் - 02**

***நிகழ்நிலை கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர்களின் திருப்தி நிலை மட்டம்***





**மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.**

***மாணவர்களின் கற்றல் செயல்பாடு தொடர்பாக பெற்றோரின் பங்களிப்பு***

அந்தவகையில் 75% ஆசிரியர்கள் "இல்லை" எனவும் 25% ஆசிரியர்கள் "ஆம்" என்றும் குறிப்பிட்டுள்ளனர். இல்லை எனின் அதற்கான காரணம் தொடர்பாக கேட்கப்பட்ட போது அநேகமான ஆசிரியர்கள் தொலைதொடர்பு சாதனங்கள் தொடர்பான பூரணமான அறிவின்மை என்ற பதிலையும் மேலும் அக்கறையின்மை, பிள்ளைகளின் மீதான நம்பிக்கை, பெரும்பாலான பெற்றோர் கல்வி அறிவு இல்லாதவர்களாக காணப்படுகின்றமை முதலான விடயங்களை குறிப்பிட்டிருந்தனர். இதனை வரைபடம் 03 தெளிவுபடுத்துகின்றது.

**வரைபடம் - 03**

***மாணவர்களின் கற்றல் செயற்பாடு தொடர்பாக பெற்றோரின் பங்களிப்பு***




**மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.**


***நிகழ்நிலைக் கல்வி வினைத்திறனான கற்பித்தலாக விளங்குவது தொடர்பாக ஆசிரியர்களின் நிலைப்பாடு***

அந்தவகையில் "இல்லை" என 61% ஆசியர்களும் "ஆம்" என 39% ஆசிரியர்களும் குறிப்பிட்டனர். அதற்கான காரணங்கள் கேட்கப்பட்டபோது கூறப்பட்ட காரணங்களாக வலையமைப்பு சீரற்ற தன்மை, மாணவர்கள் கற்றலில் கவனம் செலுத்தாமல் குறிப்பாக வீடுகளில் இருந்து கற்றலை மேற்கொண்டமையினால் வீட்டு வேலைகளில் ஈடுபடுகின்றமை,

கற்றலுக்கு பொருத்தமற்ற சூழல், தேர்ச்சி மட்டத்தை முழுமையாக அடைய முடியாமை, நேரடி கற்பித்தலை போன்று தெளிவாகவும் விளக்கமாகவும் கற்பிக்க முடியாமை, சிறந்த பெறுப்பேரினை அடைய முடியாமை முதலான விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை வரைபடம் 04 தெளிவுபடுத்துகின்றது.

**வரைபடம்: 04**

***நிகழ்நிலைக் கல்வி வினைத்திறனான கற்பித்தலாக விளங்குவது தொடர்பாக ஆசிரியர்களின் நிலைப்பாடு***




**மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.**

நிகழ்நிலைக் கல்வியானது இடர்க்காலங்களின் போது மாணவர்களின் கல்வி செயல்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்கான ஒரு தளமாக காணப்பட்டது. எனினும் இந்நிகழ்நிலைக் கல்வியானது பல்வேறு ஒழுக்க மீறல்களுக்கு மாணவர்களை உட்படுத்துவதற்கும் காரணமாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் ஆய்வுக்காக சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பின்வரும் ஒழுக்க மீறுகைகளை அடையாளப்படுத்தலாம்.

- சமூக வலைத்தளங்களுக்கு அடிமையாதல்.
- கலாசார மற்றும் பண்பாட்டு ரீதியான சீர்குலைவு.
- போதைப்பொருளுக்கு அடிமையாதல்.
- முதியோருக்கு மதிப்பளிக்காமை.
- துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகுதல்.
- வன்முறைகளுக்கு தூண்டப்படுதல்.
- ஆபாச சினிமாக்கள் மற்றும் வீடியோக்களை பகிருதல் பார்வையிடுதல்.
- எதிர்பாலாருடனான தொடர்பு அதிகரித்தல்.
- தகவல் திருட்டு
- அதீதமான கோபம்
- கற்றல் செயற்பாட்டில் பின்னடைவு.
- சுய மரியாதையை இழத்தல்.

**முடிவுரை**

இன்றைய நவீன உலகமானது நாளுக்கு நாள் புதிய புதிய மாற்றங்களை உள்ளடக்கிய வகையில் அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்றமையினை அவதானிக்கதக்கதாக உள்ளது. அந்த வகையில் இத்தகைய தொழில்நுட்ப வளர்ச்சியின் உச்ச நிலை Covid -19 பெருந்தொற்று காலத்தில் பாரியளவில் காணக்கூடியதாகயிருந்தது. அதாவது இக்காலத்தில் பெரும்பாலான செயல்பாடுகள் தொலைத்தொடர்பு சாதனங்களை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்பட்டது. இதனடிப்படையில் மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளை முன்னெடுத்து செல்லும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக் கல்வி முறையானது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். அந்த வகையில் இந்த நிகழ்நிலைக் கல்வியினால் குறிப்பாக மலையக பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களிடத்தில் அதிகரித்த சமூக வலைத்தளப் பாவனை எத்தகைய ஒழுக்க ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளது? எனும் தேடலுக்கு விடை காண முற்படுவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது (Yumna, 2020).

COVID-19 பெருந்தொற்று காரணமாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் முன்னெடுக்கப்பட்ட ஊரடங்கு முடக்கங்களினால் நேரடி கற்றலுக்கு பதிலாக நிகழ்நிலை மூலமாக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து சென்றமையினை தொடர்ந்து மாணவர்களிடத்தில் சமூக வலைத்தளங்களின் பாவனையானது பாரியளவில் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளதோடு ஒழுக்க ரீதியான தாக்கங்களையும் ஏற்படுத்துவதற்கும் காரணமாக அமைந்துள்ளது. அதாவது நிகழ்நிலை கற்றலின் வாயிலாக மாணவர்கள் சமூக வலைத்தளங்களை எதிர்மறையான விடயங்களுக்கு அதிகளவாக உபயோகிக்கக்கூடிய ஒரு நிலையே இத்தகைய ஒழுக்க மீறுகைகளுக்கு காரணமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதற்கு அமைவாக சமூக வலைத்தளங்களானது பல்வேறு நன்மைகளைக் கொண்டிருப்பினும் கூட தற்காலத்தை பொறுத்தவரையில் அது ஒரு எதிர்மறையான விளைவுகளையே தருகின்றது என்பது பலரது கருத்தாக காணப்படுகின்றது. எனவே இச்சமூக வலைத்தள பாவனையானது நன்மையாகவும், தீமையாகவும் மாறுவது அதன் பயனாளர்களின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது என்பது எடுத்துரைக்கதக்க ஒன்றாகும்.

**பரிந்துரைகள்**

சமூக வலைத்தள பாவனையானது இன்று மாணவர்கள் மத்தியில் தவிர்க்க முடியாத விடயமாக மாறியுள்ளது. இத்தகையதொரு நிலைக்கு பிரதான காரணமாக நிகழ்நிலைக் கல்வி முறைமையினை குறிப்பிடலாம். அதாவது இடர் காலங்களில் மாணவர்கள் கல்வி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நிகழ்நிலைக் கல்வி உதவியாக இருந்திருப்பினும் கூட அவற்றினால் ஏற்பட்ட இணைய சாதனங்களின் பயன்பாடானது அவர்களை ஒழுக்க ரீதியான மீறுகைகளுக்கு ஆளாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன்படி நிகழ்நிலைக் கல்வியினால் மாணவர்கள் உட்படுகின்ற ஒழுக்க மீறுகைகளை குறைத்துக்

கொள்வதற்கு அல்லது அத்தகையதொரு நிலையில் இருந்து விடுபடுவதற்கு ஆய்வாளன் என்ற வகையில் சில சிபாரிசுகள் முன்வைக்கப்படுகின்றன.

***நிகழ்நிலைக் கற்றலின் போது மாணவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்***

- கற்றலுக்கு தேவையான சமூக வலைத்தளங்களை மாத்திரம் தரவிறக்கிக் கொள்ளுதல்.
- சமூக வலைத்தளங்களில் தனிப்பட்ட கணக்கினை உருவாக்கிக் கொள்வதனை தவிர்த்துக் கொள்ளுதல்.
- கற்றல் தவிர்ந்த ஏனைய நேரங்களில் அதிகளவு தொலைத்தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுதல்.
- தொலைத்தொடர்பு சாதனங்களில் அதிகளவு நேரத்தை செலவிடுவதற்கு பதிலாக இணைபாடவிதான செயல்பாடுகளில் ஆர்வம் காட்டுதல்.
  உதாரணம்:- ஓவியம் வரைதல், கை பணிகளை செய்தல், பூந்தோட்டங்கள் அமைத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- அறிமுகமற்ற நபர்களுடன் சமூக வலைத்தளங்களின் ஊடாக நட்பு கொள்ளும்போது தனது பிரச்சினைகளையும், அந்தரங்க விடயங்களையும் பகிர்ந்து கொள்வதை தவிர்த்தல்.
- சமூக வலைத்தளங்களில் ஆபாச புகைப்படங்களோ அல்லது காணொளிகளோ வருமிடத்து அவ்வூடகத்தின் அமைப்பின் (Setting) ஊடாக அதனை தடுத்தல்.
  உதாரணமாக: YouTube இல் வரும் ஆபாச வீடியோக்களை அதன் அமைப்பில் காணப்படுகின்ற "not interested" எனும் தெரிவினை கொடுப்பதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம்.
- Snapchat போன்ற வலைதளங்களினால் எடுக்கப்படும் புகைப்படங்கள் ஒரு போலியான முகத்தோற்றத்தினை வழங்குகின்றது. இத்தகைய போலியான தோற்றப்பாடுகளுக்கு கவரப்படுவதை தவிர்த்துக் கொள்ளுதல்.
- தனது புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் "profile" இடும் போது குறிப்பாக பெண்கள் "my contacts" எனும் பிரிவினை அணுகுதல்.
- இணைய விளையாட்டுகளுக்கு பதிலாக உடல் சக்தி தரும் விளையாட்டுகளில் ஆர்வம் காட்டுதல் வேண்டும்.

***நிகழ்நிலை கற்றலின் போது பெற்றோர் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்***

- பெற்றோர்கள் பிள்ளைகளின் நிகழ்நிலைக் கல்வி செயற்பாடுகள் தொடர்பில் அவதானமாக செயல்பட வேண்டும்.
- சமூக வலைத்தள பாவனையினால் ஏற்படக்கூடிய நடைமுறை பிரச்சனைகளை பிள்ளைகளுக்கு எடுத்துக் கூற வேண்டும்.
- பிள்ளைகளின் நடத்தை மாற்றம் தொடர்பில் கவனம் செலுத்துதல்.

- அதிக நேரம் தொலைத்தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதிலிருந்து பிள்ளைகளை கட்டுப்படுத்துதல்.
- பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகள் தொடர்பாக ஆசிரியர்களுடன் கலந்துரையாடுதல்.
- தேவையற்ற WhatsApp குழுமங்களில் பிள்ளைகள் இருப்பதை தடுத்தல்.
- கற்றல் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தொலைத்தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதை கட்டுப்படுத்துதல்.
- கற்றல் செயல்பாடுகளுக்கு மாத்திரம் பயன்படுத்தும் "e-Learning package" ஐ மாத்திரம் செயற்பாட்டில் வைத்திருத்தல்.
- தனது சுய கௌரவத்திற்காக விலை உயர்ந்த கணினி கையடக்க தொலைபேசி முதலியவற்றை வாங்கிக் கொடுப்பதை தவித்தல்.
- பிள்ளைகள் தொலைதொடர்பு சாதனங்களில் என்ன செய்கின்றார்கள் எதை பார்க்கின்றார்கள் என்பது தொடர்பில் விழிப்புணர்வாக இருத்தல்.

***நிகழ்நிலை கற்றலின் போது ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்***

- நிகழ்நிலை கற்பித்தலின் போது மாணவர்கள் கற்றலில் கவனம் செலுத்துகின்றாரா என்பதில் அவதானமாக இருத்தல்.
- WhatsApp குழுமங்களில் மாணவர்களை இணைக்கும் போது group admin மாத்திரம் மாணவர்களின் தொலைபேசி இலக்கங்களை பார்வையிடக் கூடியதான அமைப்பினை செயல்படுத்துதல்.
- சமூக வலைத்தளங்களின் நன்மை தீமைகளை நடைமுறையோடு தொடர்புப்பட்ட வகையில் மாணவர்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- தொலைத்தொடர்பு சாதனங்கள் தொடர்பான பூரண அறிவற்ற பெற்றோர்களுடன் கலந்துரையாடி அது தொடர்பான விழிப்புணர்வினை வழங்குதல்.
- மாணவர்களை கவரக்கூடிய வகையிலும், ஆர்வத்துடன் கற்றலை மேற்கொள்ள் கூடிய வகையிலும் கற்பித்தலை மேற்கொள்ளுதல்.

**உசாத்துணை**


அபிராமி,கு. (2000). *மல்டிமீடியா கற்றுக்கொள்ளுங்கள்.* தமிழ் புத்தகாலயம்.

அனஸ்,எம்.எஸ்.எம். (2006). *மெய்யியல் கிரேக்கம் முதல் தற்காலம் வரை.* குமரன் புத்தக இல்லம்.

ஆன்டோ பீட்டர், முா., ராஜ்மோகன், ரூ. (1990). *இன்டர்நெட் கையேடு.* வீக்காஸ் பப்ளிஷிங் ஹவுஸ்.

இராமச்சந்திரம்,கே.என். (2001). *இணையத்தில் இணைவோம்.* கங்கை புத்தக நிலையம்.

இராமலிங்கம், அ. (2003).*ஒழுக்கம்.* மோனாரிக் கிரா.ஃபிக்ஸ்..

இராஜேஸ்கண்ணன், இ. (2021). *கோவிட் - 19 பேரிடகாலத்தில் இளையோரின் கல்வி சவால்களும் சாத்தியங்களும்.* ஆறுதல் வெளியீடு.

குணரத்தினம், வே. (2009). கணணி விளையாட்டுகளும் வன்முறையும். *கிழக்கொளி.* 50வது சிறப்பு மலர். ஊழியர் சங்க வெளியீடு. கிழக்குப் பல்கலைக்கழகம்.

கேசவன்,க. (1998). *மெய்யியல் - முதற்கலைத்தேர்வு மாணவர்கட்கானது.* பதிப்பு 1. கோபிகா பதிப்பகம் நியூட் குறப்.

சமூகவலைத்தளங்களின் பாவனையும் அதிகரித்து வரும் கலாச்சார சீர்கேடுகளும். Retrieved June 06, 2023, from https://newsplus.lk/feature/3621/

சமூக வலைத்தளங்களும் அதன் பயன்பாடுகளும். Retrieved June 25, 2023, from http://upscmainsintamil.blogspot.com

சரண்யா,வ. (2013, September13). சமூகவலைத்தளங்களில் அதிக நேரத்தை செலவிடும் இளவயதினருக்கு மனநல பாதிப்பு. *வீரகேசரி.*

சாகித்தியா,அ. (2001). *இன்டெர்நெட் உலகில் சற்றிங் கம்பியூட்டர் வேல்ட்.* மிலேனியம் பிரிண்டர்ஸ்.

சிவானந்தமூர்த்தி,க. (1998). *ஒழுக்க நியமங்கம் அதன் நடைமுறைகளும்.* லங்கா புத்தகசாலை.

சுந்தரராஜன்,கே. (2010). *இன்டர்நெட் கையேடு.* கண்ணதாசன் பதிப்பகம்.

ஞானகுமாரன்,நா. (2012). *மெய்யியல்.* சேமமடு பதிப்பகம.

பிரதாபன்,கா. (2015. May 16). உலக தொடர்பாடல் தினம். *வீரகேசரி வார வெளியீடு.*

பிரேம்குமார், இ. (2020). *கலை இலக்கிய மெய்யியல் கொள்கைகள்:* குமரன் புத்தக இல்லம்.

புறோட்,சி.பு. (1968). *ஐவகை ஒழுக்கவியல் கொள்கைகள்.* கல்வி வெளியீட்டுத் திணைக்களம். இலங்கை அரசாங்கம்.

மனித வாழ்வில் சமூகவலைத்தளங்கள். Retrieved June 25, 2023, from https://www.eaglevix.com

முனீஸ்மூர்த்தி,மு. (2000). *ஊடகவியல்: தொலைநிலைக்கல்வி நிலையம்.* பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

ராம்குமார். (2000). *இன்டர்நெட் இணையம்.* மாணிக்க வாசகர் நூலகம். ஸ்டெர்பார்ஸ் பிரஸ்.

ஜமாஹிர்,பீ.எம். (2012). *ஒழுக்கவியல் ஓர் அறிமுகம்:* எம்.ஜே.எம் அச்சகம்.

Divajini. (2015). மாணவர்கள் மீது வெகுஜன ஊகங்களின் தாக்கம்: கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

Yumna, A.S.F. (2020). *சமூக வலைத்தளங்களின் அதிகரித்த பாவனையும் பாடசாலை மாணவர்களின் விழுமியப் பாதிப்பும்:* கிழக்கு பல்கலைக்கழகம்.

ஜீனியஸ். (2018, July 16). இணையத்திற்கு அடிமையாகும் சிறுவர்கள். *ஜீனியஸ் வெளியீடு.*

The social and ethical issues of online learning during the pandemic and beyond. Retrieved June 25, 2023, from https://link.springer.com/artivle